ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

ராஜகோபாலதாஸன் அருளிச்செய்த

# ॥ நெஞ்சில் அஞ்சு ॥

(அருத்த பஞ்சகம்)

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்கராமாநுஜமஹாதேஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ நெஞ்சில் அஞ்சு ॥
(அருத்த பஞ்சகம்)

### பிரம்மத்தின் ஸ்வரூபம்-விளக்கம்

அமலன் அலகிலா இன்பன்⋆
குறைவிலா அறிவுமாறா இறைவன்⋆
விமலன் மற்றை குணத்துடன்⋆
மேனியில் திருமகளை அணைவன்⋆
தரிப்பன் அணியும் ஆயுதமும்⋆
வானவருடன் தழைத்து இருப்பன்⋆
அளிப்பன் அடியாருக்கு மாநகர்⋆
தந்து களிப்பன் நம் அருளாளன் (1)

### பகவானின் ஸங்கல்பம்-விளக்கம்

தன் நினைவால் தாரணியில்⋆
பொருள் அனைத்துள் தான் உறைந்து⋆
தனிமையில் உள்ளிருந்து தானே⋆
இயல் நிலை கிரிசையில் நிறைந்து⋆
இருள் நீங்கி வரிக்கும் அடியவர்⋆
அவருக்கு அலர்மகளுடன் நீ இன்று⋆
அருளும் பேரின்ப பேரருளான்⋆
எனும் பெருந் தெய்வமாய் நின்று (2)

### ஜீவாத்மாவின் ஸ்வரூபம்-விளக்கம்

அடிமையாய் அறிவான அணு வேறாகி⋆
பூதம் ஐந்தால் சீராகி⋆
புலன் மனம் காற்று புத்தியுமாய்⋆
நைந்து அழியும் உடலுமாகி⋆
உள்ளான் உள்ளின் உள்ளே⋆

www.prapatti.com

இன்னுயிராய் அகலா அமுதமாகி⋆
நின்றான் அத்தனின் அத்தன்⋆
அத்திகிரி அருளாளன் ஓர்நிதியாகி (3)

எம்பெருமானின் விளையாட்டுகள்-விளக்கம்

இரந்து அளித்த குணத்தாலும்⋆
அவரவர் வினைப் பயனாலும்⋆
பிறந்து உழன்று மறைந்து⋆
அதுலே சுழலும் உயிரனைத்திலும்⋆
உறைந்து உயிருக்கு உயிராய்⋆
உள்ளும் எல்லாம் இயக்கும்⋆
சிறந்த திருவருளாளன் அவன்⋆
உகப்பதும் இவ் விளையாட்டே (4)

மோக்ஷ விரோதி-விளக்கம்

உணராமல் உய்யும்வழியை விலக்கி⋆
ஊன் இன்பத்தில் மயங்கி⋆
அறியாமல் தகுதியிலார் தாளில்
வணங்கி⋆ தத்துவத்தை விலக்கி⋆
சிதறாமல் சிறுவுறவை சிந்தித்து⋆
உம்மடியார் அவரை நிந்தித்து⋆
கழியாமல் இவையில் உழலும் நீர்⋆
பழியாமல் அருளாளனை அடைவீரே (5)

வினைப்பயனால் பிறவித் துன்பம்

உடலால் வினையும் வினையால்
உடலுமென⋆ மாறி மாறிக் குவிய⋆
அதனால் இரண்டும் அநாதியென⋆
அறிந்தவர் தாம் உரைய⋆
பாழும் உலகில் வழியறியாது⋆



www.prapatti.com

அமரமனித விலங்கு அசையாதென⋆
வாழுமென அருள் செய்வான் தம்மை⋆
அத்திகிரியான் அடைவாரேயென (6)

## பத்தி உபாயம்-விளக்கம்

நினைத்து கேட்டு பேச மல்கி⋆
பகட்டின்றி துதித்து அன்பு பூண்டு⋆
அனைத்தும் வேண்டாவென எட்டும்⋆
அருளாளன்மேல் பத்தி கொண்டு⋆
யம நியம மூச்சடக்கி ஆசனம் திருத்தி⋆
திருமேனி விடாது நினைத்து⋆
மகிழ்ந்து முடிப்பார் நல் யோகம்⋆
அடைவார் அனைத்தும் போகமே (7)

## ப்ரபத்தி உபாயம்-விளக்கம்

அடியார் அனவரும் புகலின்றி⋆
சரணாக தாளில் அடைக்கலமாகி⋆
கடுவினை காய்ந்து அப்பொழுதே⋆
அங்கு அவருக்கு அருள்விளக்காகி⋆
பெருந் துணையாய் அவள் வழியே⋆
பரிவுரையால் தருவான் அவன்⋆
அரும்பேறு என பொழியும் நம்⋆
பெருந்தேவியுடன் பேரருளாளன் (8)

## மோக்ஷத்தின் இயல்பு-விளக்கம்

இருவினை விலக்கி சிறைமீட்டி⋆
உச்சித் துளைவழி உயிரெடுத்து⋆
மறுபிறவி தொலைய வான்வழி கண்டு⋆
ஆவி அமரருடன் கடந்து⋆
விண் சென்று தன்னியல் அறிந்து⋆

அகலா அடிமை செய்வதும்⋆
தன் நிகரில்லா பெருமகள் உறையும்⋆
அத்திகிரியான் திருவருளாலே (9)

## மோக்ஷத்தில் பணி செய்தல்-விளக்கம்

தனிக்கோலாய் தாமரையாள் இடம்
கொண்டு⋆ திகழும் திருமாலே⋆
உமக்கேயாய் அடியாரோடு பணி
செய்யும்⋆ பேரின்பம் தருவாயே⋆
விட்ட பயனை மறந்து மருளில்⋆
வீழ்ந்த என்னை மீட்டி ஆளும்⋆
கிட்டி வந்து எமக்கு அருளும்⋆
கருணைக்கடலே என்றும் காக்கும் (10)

## பலன்

திருமால் தனித்துதானே பரம்பொருளாய்⋆
அவனருளால் நிறையும் அடியன்⋆
பெருநிலையென செய்யும் பத்தி⋆
மற்றும் இயலதார் கொள்ளும் ப்ரபத்தி⋆
உயர்ந்த குற்றேவலும் நெடும்பயனாய்⋆
அதற்குதடை இருளாம் இவை ஐந்தும்⋆
அறிவாய் பேதையின் போதைக்கு⋆
மருந்தென முன்னோர் மறையும் உரையும் (11)



www.prapatti.com